2014 ஆகஸ்ட் 8]
383—

தரம் உயர்த்துதல்

***34503—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், சாயமலை ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை, 5,000-க்கும் மேற்பட்டு உள்ளதால், மேற்படி கிராமத்தில் தற்போது இயங்கி வரும் கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, வரும் நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

“தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு,
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு,
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு,
பூப்போல வைத்து உன்னை காப்பதென்பாடு,
சத்தியம் நீயே, தருமத் தாயே, குழந்தை வடிவே, தெய்வ மகளே.”

என்று புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்தில் பாடிய அந்த வரிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு உயிர் கொடுத்துள்ளார்கள். பெற்ற பிள்ளையே உதவாவிட்டாலும், ஒற்றைப் பசுவைக் கொடுத்து தாயின் துயரைத் துடைத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன் கால் நடை தளர்ந்த கணவனை இழந்த பெண்களுக்கு கால்நடை தந்த கருணைத் தெய்வம், இந்தியா வளர்ச்சி பெற, தமிழகத்தில் புரட்சிகளை ஏற்படுத்தி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், சாயமலை கிராமத்தில் சுமார் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தருகிறேன் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Mobile Unit ஒன்றினை சங்கரன்கோவில் தொகுதியில் நிறுவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், நீங்களும் பாட்டுப் பாடி சொல்லுங்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையம் அமைக்க முடியாத கிராமங்களுக்கு, நடமாடும் கால்நடை மருத்துவ நிலையம் அமைக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமத்தை ஆய்வு செய்து, தேவைப்படும் என்று சொன்னால் அங்கே ஒரு Mobile Unit அமைக்கப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதியானது, விவசாயப் பெருமக்களும், கால்நடைகளும் அதிகமாக இருக்கின்ற பகுதி. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று Mobile Unit அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவதாக அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சின்ன எலந்தங்குளம் என்ற கிராமத்தில் அரசு புறம்போக்கு மேய்ச்சல் தரிசு நிலம் 27 ஏக்கர் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு 100 ஏக்கருக்கு மேல் நிலம் வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த 27 ஏக்கர் நிலத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மானாமதுரை பேரூராட்சியில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வைக்கோல் விற்பனை நிலையத்தையும் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தி, நவீனப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கால்நடை மருந்தகம் ஆய்வு செய்யப்பட்டு, அங்கே 10 ஆயிரம் கால்நடை அலகுகளுக்கு மேல் இருந்தால்தான் அதைத் தரம் உயர்த்த முடியும். எனவே, 10 ஆயிரம் அலகுகளுக்கு மேல் இருந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தித் தரும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

384—

விற்பனை நிலையம்

***36202—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?